இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 243 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 30 – ஞாயிற்றுக்கிழமை 13 ஏப்ரல் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 243: Thiruvalluvar Year - 2056 - Panguni 30 - Sunday 13 April 2025 - Dak 16 Pages ₹ 5.00

## கொத்தடிமை அ.தி.மு.க.வை மிரட்டி அதிகார வெறியோடு அமைக்கப்பட்டிருக்கிறது!

# அ.தி.மு.க. - பா.ஜ.க., ஊழல் - தோல்விக் கூட்டணி!

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டமான அறிக்கை!

**சென்னை, ஏப்.13-**

**“கொத்தடிமை அ.தி.மு.க. தலைமையை மிரட்டி அதிகார வெறியோடு அமைக்கப் பட்டிருக்கிறது, அ.தி.மு.க. - பா.ஜ.க., ஊழல் – தோல்விக் கூட்டணி” என்று கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி என்பது தோல்விக் கூட்டணி. தொடர் தோல்வியை அந்த அணிக்குக் கொடுத்தவர்கள் தமிழ் நாட்டு மக்கள். இதே தோல்விக் கூட்டணியை மீண்டும் உருவாக்கி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

நேற்றைய தினம் சென்னை வந்த உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் அளித்த பேட்டி, அவர் வகிக்கும் பதவிக்குத் தகுதியானதாக இல்லை. அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியை உறுதி செய்து கொள்வது அவரது விருப் பம் சார்ந்தது. ஆனால் எதற்காக இந்தக் கூட்டணியை உருவாக்கினார்கள், எந்தக் கொள்கையின் அடிப்படையில் கூட்டணி சேர்ந்துள்ளார்கள் என்று சொல்லவில்லை. மாறாக, குறைந்தபட்ச செயல்திட்டத்தை உருவாக்கப் போவதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

**தி.மு.க.வை விமர்சிக்க நடத்திய செய்தியாளர் சந்திப்பு!**

நீட் தேர்வை இந்தித் திணிப்பை மும்மொழிக் கொள்கையை வக்பு சட்டத்தை எதிர்ப்பதாகச் சொல்கிறது அ.தி.மு.க.; தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டுக்கான இடம் குறையக் கூடாது என்று வலியுறுத்துவதாகச் சொல் கிறது அ.தி.மு.க. இவை எல்லாம் இவர் களது குறைந்தபட்ச செயல்திட்டத்தில் இருக்கிறதா? இது எதைப் பற்றியும் உள்துறை அமைச்சர் பேசவில்லை. அ.தி.மு.க. தலைமையையும் அவர் பேச அனுமதிக்கவில்லை. மாறாக



தி.மு.க.வையும் தி.மு.க. அரசையும், என்னையும் விமர்சிப்பதற்கு மட்டுமே அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பைப் பயன்படுத்தி இருக்கிறார் உள்துறை அமைச்சர் என்பதைப் பார்த்தவர்கள் அறிவார்கள்.

மாநில உரிமை, மொழியுரிமை, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றைக் காப்ப தற்காகக் களத்தில் நிற்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால், அதிகார வெறியோடு அமைக்கப்பட்டி ருக்கும் பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணி என்பது, இது அத்தனைக்கும் எதிரானது.

உள்துறை அமைச்சரால் சொல்ல முடிய வில்லை. ‘நீட் தேர்வு சரியானது’ என்றாவது தனது வாதத்தை அவர் வைத்திருக்க வேண்டும். மாறாக, ‘நீட் தேர்வு எதிர்ப்பு என்பதே திசை திருப்புவது’ என்ற திசை திருப்பும் பதிலையே உள்துறை அமைச்சர் சொல்லி இருக்கி றார். 20க்கும் மேற்பட்ட மாணவக் கண்மணிகள் தமிழ்நாட்டில் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்திருக்கி றார்கள். இவர்களும் திசை திருப்பும் வகையில் தான் தற்கொலை செய்து கொண்டார்களா?

இங்கு மட்டுமல்ல, பீகாரிலும் மாண வர்கள் தற்கொலை செய்துள்ளார்கள். இதற்கு உள்துறை அமைச்சர் என்ன சொல்கிறார்? ஐந்து மாநிலங்களில் நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக சி.பி.ஐ. வழக்குத் தாக்கல் செய்து விசாரணை நடத்தி வருவதும், மாணவர்கள் சிலரும் பெற்றோர் சிலரும் கைது செய்யப்பட் டுள்ளதாவது உள்துறை அமைச்சருக்குத் தெரியுமா? சி.பி.ஐ. யாருடைய கட்டுப்பாட் டில் இருக்கிறது? விசாரிக்கவும். அதன் பிறகு ‘நீட் தேர்வு எதிர்ப்பு’ என்பது திசை திருப்புவதற்காகச் சொல்லப்படுகிறதா மருத்துவக் கல்வியைக் காப்பதற்காகச் சொல்லப்படுகிறதா என்பதை உள்துறை அமைச்சர் அறிவார்.

## உள்துறை அமைச்சரே; இது மணிப்பூர் அல்ல! தமிழ்நாடு!

பதவி மோகத்தில், தமிழ்நாட்டின் சுயமரி யாதையை தமிழ்நாட்டின் உரிமைகளை டெல்லியிடம் அடமானம் வைத்து, தமிழ் நாட்டை பாழாக்கியவர்தான் பழனிசாமி என்பதை யாரும் மறக்கவில்லை.

**திசை திருப்பும் வகையில்தான் தற்கொலை செய்துகொண்டார்களா?**

‘நீட்’ தேர்வைப் பற்றி ஊடகவியலாளர் கள் திரும்பத் திரும்ப கேள்வி எழுப்பிய போது அதற்கு சரியான பதிலை

**அமைதியைக் குலைக்கப் பார்ப்பதா?**

உள்துறை அமைச்சகத்தைக் கையில் வைத்திருக்கும் ஓர் அமைச்சர், ‘தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு’ என்று வாய்க்கு வந்தபடி பேசி இருப்பது கடும் கண்டனத்துக்கு உரியது. இது மணிப்பூர் அல்ல, தமிழ்நாடு தான் என்பதை உள்துறை அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன். ஒன்றரை ஆண்டு களாக 250 பேர் படுகொலை செய்யப் பட்ட மாநிலத்தை பா.ஜ.க. ஆண்டது. அங்கே போய் அமைதியை நிலைநாட்ட முடியாத உள்துறை அமைச்சர், அமைதி யான மாநிலத்துக்குள் வந்து அமைதியைக் குலைக்கப் பார்க்கிறார். அமைதியான மாநிலம் என்பதால் தான் அனைத்து வகையிலும் முன்னேறி வருகிறது தமிழ் நாடு. இதனை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே ஒப்புக் கொள்கின்றன. ஆனால், சட்டம் ஒழுங்கு மோசம் என்று உள்துறை அமைச்சர் பொறுப்பற்ற வகை யில் பீதியைக் கிளப்பிச் சென்றிருக்கிறார்.

> **பா.ஜ.க. தனியாக வந்தாலும், எவர் துணையோடு வந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டக் காத்திருக்கிறார்கள். சுயமரியாதையின்றி டெல்லிக்கு மண்டி யிட்டு தமிழ்நாட்டை அடகு வைக்கும் துரோகக் கூட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க விடையளிப்பார்கள்.**

**தமிழ்நாட்டை அடமானம் வைக்க அ.தி.மு.க. துடிக்கிறது!**

அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்று அறி வித்த மேடையில் ஊழலைப் பற்றி உள் துறை அமைச்சர் பேசிய காட்சியைப் பார்த்து தமிழ்நாட்டு மக்கள் சிரிக்கவே செய்வார்கள். ஊழலுக்காக இரண்டு முறை முதலமைச்சர் பதவியை விட்டு விலக வைக்கப்பட்டவர் ஜெயலலிதா. பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் பல ஆண்டுகளாக நடைபெற்ற வருமானத் துக்கு அதிகமான சொத்துக் குவிப்பு வழக் கில் நான்காண்டு சிறைத் தண்டனை பெற்றவர் ஜெயலலிதா. அவரது கட்சியு டன் கூட்டணி வைக்கும் போது பேசத் தகுதியான வார்த்தையா ஊழல் என்பது?

இன்றைய அ.தி.மு.க. பொறுப்பாளர் களது உறவினர் குடும்பங்களைச் சுற்றியும் மத்திய புலனாய்வு அமைப்பு கள் இரண்டு சோதனைகள் நடத்தியதை யும், அதில் இருந்து தப்பித்துக் கொள்ள பா.ஜ.க. தலைமையை நோக்கி அவர்கள் ஓடி வந்ததையும், அதையே நிபந்தனை யாக வைத்து கூட்டணியை உறுதி செய்ததையும் உணராதவர்கள் அல்ல தமிழ்நாட்டு மக்கள். அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியை உறுதி செய்ததே ‘ஊழல்’ தான் என்பதை அனைத்தும் அறிந்த தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். இரண்டு ரெய்டுகள் நடந்தவுடன் அ.தி.மு.க.வை அடமானம் வைத்திருப்பவர்கள், அடுத்து தமிழ்நாட்டை அடமானம் வைக்கத் துடிக்கிறார்கள்.

தமிழை ஒழிக்க இந்தி, தமிழர்களது வளர்ச்சியைத் தடுக்க பல்வேறு சதித் திட்டங்கள், தமிழ்நாட்டு உரிமையைப் பறிக்க தொகுதி மறுவரையறை எனத் திட்டமிட்டு தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் சிதைத்து சீரழிக்க நினைக் கிறது பா.ஜ.க. தலைமை. பழைய கொத் தடிமைக் கூடாரமான அ.தி.மு.க.வின் தலைமையை மிரட்டிப் பணிய வைத்து தன்னுடைய சதித் திட்டங்களை பா.ஜ.க. நிறைவேற்றப் பார்க்கிறது.

பா.ஜ.க. தனியாக வந்தாலும், எவர் துணையோடு வந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டக் காத்திருக்கி றார்கள். சுயமரியாதையின்றி டெல்லிக்கு மண்டியிட்டு தமிழ்நாட்டை அடகு வைக் கும் துரோகக் கூட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க விடையளிப்பார்கள்.

இவ்வாறு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கை யில் கூறியுள்ளார்.

---

### தமிழ்நாடு அரசின் வழக்கில்

## குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகள்!

### தீர்ப்பின் நகல் அனைத்து மாநில ஆளுநர்களுக்கும் அனுப்பி வைப்பு!

புதுடெல்லி, ஏப். 13 –

தமிழ்நாடு அரசின் வழக்கில் குடியரசுத் தலைவருக்கு உச்சநீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு சட்டப்பேரவையில் மீண் டும் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு தன்னுடைய சிறப்பு அதிகாரத்தின் கீழ் உச்சநீதிமன்றமே ஒப்புதல் அளித்து தீர்ப்பு வழங்கியது.

415 பக்க தீர்ப்பு நகலை அனைத்து மாநில ஆளுநர் அலுவ லகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள உச்சநீதிமன்றம் தீர்ப்பு நகலை ஏப்.11ஆம் தேதி நள்ளிரவில் இணைய தளத்திலும் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் வழக்கில் குடியரசுத்



தலைவருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவுகளை வெளியிட்டுள்ளது.

அதில்,

* மாநில அரசு நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பும் மசோதாக் களை, அவர் குடியரசுத் தலைவ ருக்கு அனுப்பும் பட்சத்தில் குடியர சுத் தலைவர் அதன் மீது 3 மாதங் களுக்குள் முடிவெடுக்க வேண்டும்.

* ஒருவேளை முடிவெடுக்க தாமதம் ஆனால், அதற்கான உரிய காரணத்தை மாநில அரசுக்கு, குடியரசுத் தலைவர் தெரிவிக்க வேண்டும். காலக்கெடுவிற்குள் குடியரசுத் தலைவர் எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை என்றால் அவருக்கு எதிராக மாநிலங்கள் நீதிமன்றத்தை நாட முடியும்.

* மசோதா மீது எந்த நடவ டிக்கையும் எடுக்காமல் கிடப்பில் போட்டாலும் குடியரசுத் தலைவ ருக்கு எதிராக நீதிமன்றத்தில் முறையீடு செய்ய மாநிலங்களுக்கு உரிமை உண்டு.

* ஆளுநரைப் போலவே, குடியரசுத் தலைவரும் கூட மசோ தாக்கள் மீது காலவரையின்றி முடிவெடுக்காமல் ‘வீட்டோ’ அதிகா ரத்தை பயன்படுத்த முடியாது.

* மாநிலங்களும் ஒத்துழைப் புடன் செயல்பட வேண்டும். குடியர சுத் தலைவர் எழுப்பும் கேள்வி களுக்கு பதில்கள் வழங்க வேண் டும்.

மேலும், மசோதா மீது ஒன்றிய அரசு அளித்த பரிந்துரைகளை மாநில அரசு விரைந்து பரிசீலிக்க வேண்டும்.

* ஒருவேளை மாநில அரசின் மசோதா அரசியல் சாசனத்திற்கு எதிராக இருக்கிறது என குடியரசுத் தலைவர் கருதினால், அவர் உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்கலாம்.

